(1981 பிப்ரவரி 10

சைதாபேட்டை தொகுதியில் மினி பஸ்கள் விடும் திட்டம்

*வினா எண் 276 திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் மினி பஸ்கள் விடுவதற்கான உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சைதாப்பேட்டையிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கும், திருவேற்காட்டுக்கும், அத்திப்பேடு வழியாக ஒரு மினி பஸ் விடப்பட்டு வருகிறது.

திரு. து. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை தொகுதியில் பல்வேறு சாலைகளில் பெரிய பஸ்கள் செல்வதற்கு ஏற்றதாக இல்லாததால், மினி பஸ்கள் விடுவதற்கு அரசு முன்வருமா? அடுத்து, மினி பஸ்களில் எந்த இடத்தில் ஏறினாலும் எந்த இடத்தில் இறங்கினாலும், செல்லுகிற தூரத்திற்கு ஏற்றவகையில் கட்டணம் இல்லாமல், ஒரே கட்டணத்தை வசூலிப்பதால். ஏழை எளிய மக்கள் கஷ்டப்படுகிறார்கள், என்பதால், செல்லுகின்ற தூரத்திற்கு ஏற்றவாறு கட்டணங்களை வசூலிக்க அரசு முன் வருமா? மினி பஸ்களில் கண்டக்டர்கள் இல்லாததால்தான் இந்த நிலைமை இருக்கிறது என்றும், மேலும் பல கஷ்டங்கள் இருக்கிறது என்றும் சொல்வதால் அந்த மினி பஸ்களுக்கும் கண்டக்டர்கள் போட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் அந்தப் பகுதியில் இல்லையென்பதை அரசின் கவனத்திற்கு தற்போது கொண்டு வந்திருப்பதால், அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை பயன் படுத்தி நான் ஒன்றில் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் உள்ள சூழ்நிலைகள் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் சங்கடங்கள் இருக்கின்றன. அடிக்கடி ஏறி வரும் டீசல் விலை காரணமாகவும், மற்றவற்றின் காரணமாகவும் எவ்வளவு நஷ்டம் ஏறபடுகின்றன என்பதை நாம் அறிவோம். அவற்றைக் குறைப்பதற்கான வழிவகைகளை, நடவடிக்கைகளை, ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு அளித்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளகிறேன். மினி பஸ்களில் கண்டக்டர்கள் இல்லை என்று சொன்னார்கள், நாம் குறைவான கட்டணத்தை வசூலித்து அந்த சிறிய பஸ்களைப் பயன்படுத்துவதால், ஒரு கண்டக்டர் போடுவதன் மூலம் அதற்கான செலவும் அதிகமாகும் என்பதால், கண்டக்டர் போடுவது என்பது இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 10]

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் கேள்விநேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, பொதுவாக சைதாப்பேட்டையிலிருந்தும் சென்னையில் பிற பகுதிகளிலிருந்தும் சிறு வியாபாரிகள், காய்கறி வியாபாரிகள் கொத்துவால் சாவடி போன்ற பெரிய அங்காடிகளுக்கு அதிகமாகச் சென்று வருகிறார்கள். அவர்கள் கூடைகளை வைத்துக் கொண்டு செல்வதில் பெரும் தொந்தரவு இருப்பதால் எப்படி ரயிலில் வெண்டர்ஸ் காரேஜ் தனியாக வைத்திருக்கிறார்களோ அதைப் போல வென்டார்ஸ் பஸ் என்கிற அளவுக்கு தனியாக மினி பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் பகுதிகளுக்கும் விடப்படாமல் இருந்தாலும் அது நடைமுறையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும். நான் முதலிலே சொன்னதைப்பற்றி கட்டண உயர்வு பற்றி மாண்புமிகு உறுப்பினர் கருத்து எதுவும் சொல்லாதது வருத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே அமைச்சர் உறுப்பினரிடம் ஆலோசனை கேட்கக் கூடாது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, மினி பஸ்கள் எந்த அடிப்படையில் விடப்படுகின்றன என்பதையும், முழுமையாக தேசியமயமாக்கப்பட்ட மாவட்டங்களில் அதிகமாக மினி பஸ்களை விட அரசு முன் வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, பெரிய பேருந்துகளை விட முடியாத இடங்களில் மினி பஸ்களை விட நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊட்டியை மனதில் வைத்துதான் சொல்லி இருக்கிறார் என்று கருதுகிறேன். அது மலைப் பகுதியாக இருப்பதால் அதிக அளவில் மினி பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யும் என்பதையும் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 30 மினி பஸ்களை வாங்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: தலைவரவர்களே, பழைய பேருந்துகளை மாற்றியமைத்து அவை புதிய மீடியம் சைஸ் பேருந்துகளாக விடப்படும் என்ற செய்தி

பத்திரிகையில் வந்தது. அதுபற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மினி பஸ்களை ஓட்ட பெண்கள் முன்வந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இப்போது நம்முடைய போககுவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் பழைய பஸ்களை விற்றுவிடாமல் அதை மாற்றியமைத்து, மினி பஸ்களாக விட நடவடிக்கை எடுத்து, அது வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் கேட்ட கேள்விக்குகூட இது பயனுள்ளதாக இருக்கும். அதைப் போன்று பெண்கள் ஓட்டுநர்களாக வேலை செய்ய முன்வந்தால் அவர்களை நியமிப்பீர்களா என்று கேட்டிருக்கிறார். இப்போது தான் நடத்துனர்களாக பெண்களை நியமிக்கும் ஒரு முயற்சியை எடுத்திருக்கிறோம். அது எப்படி வெற்றிகரமாக அமைகிறதோ அதைப் பொறுத்து மற்ற நடவடிக்கையும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆலோசனை கூறுங்கள் என்று சொன்னார்கள். இங்கே உறுப்பினர்கள் ஆலோசனை சொன்னால் அது சரியாகாது, ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்கள், மேனேஜிங் டைரக்டர், அமைச்சர் ஆகியோர் அடங்கிய அமைச்சர் செயர்மென் என்ற முறையில் ஒரு ''நேஷனல் டிரான்ஸ்போர்ட் கன்ஸல்டேட்டிவ் கமிட்டி'' 1977-ல் அமைக்கப் பட்டது. பின்னர் இந்த அவை கலைக்கப்பட்டு, தேர்தல் நடைபெற்றதற்குப் பிறகு மீண்டும் அந்தக் கமிட்டி புதுப்பிக்கப் படவில்லை, அந்தக் கமிட்டியைப் புதுப்பித்தால் நாங்கள் அங்கே வந்து ஏராளமான ஆலோசனையைத் தருகிறோம். கமிட்டியைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தக் கமிட்டி புதுப்பிக்கப்படும். அந்தக் கமிட்டியின் மூலம் கேட்ட ஆலோசனைகளுக்கு நடவடிக்கையும் எடுத்து வருகிறோம். அந்தக் கமிட்டி இருப்பதால் இங்கே இருப்பவர்களுக்கு பொறுப்பு இல்லை என்று சொல்வார்களானால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் பொறுப்பு இல்லை என்று சொல்லவில்லை; அங்கே வந்து சொல்லுகிறோம் என்றுதான் சொன்னார்.